www.Padasalai.Net

அரையாண்டு-மாதிரித் தேர்வு
பொருளியல்.
மேல்நிலை இரண்டாம் ஆண்டு

காலம் : 3.00 மணி மொத்த மதிப்பெண்கள் : 90

பகுதி –அ

**I.** பொருத்தமான விடையை தெரிவு செய்யவும். **20 X 1 = 20.**

1. ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடுக.
அ. உற்ப த்தி மற்றும் பகிர்வும் ஆ. உற்பத்தி மற்றும் பரிமாற்றம்
இ. உற்ப த்தி மற்றும் நுகர்வு ஈ. உற்ப த்தி மற்றும் சந்தையிடுகை .

2. NNP என்பது _____________
அ. Net National Product ஆ. National Net Product
இ. National Net Provident ஈ. Net National Provident

3. தலையிடாக் கொள்கைக்குப் பதிலாக கீன்ஸின் கோட்பாடு _____யை எடுத்துரைக்கிறது.
அ. அரசுத்தலையீடின்மை ஆ. உச்சஅளவுத்தலையீடு
இ. சிலசூழல்களில் அரசின்தலையீடு ஈ. தனியார்துறைதலையீடு

4. ஒரு திறந்து விடப்பட்ட பொருளாதாரத்தில் (Open Economy) இறக்குமதி, பெருக்கியின் மதிப்பை
அ) குறைக்கிறது ஆ) உயர்த்துகிறது இ) மாற்றாது ஈ) மாற்றும்.

5. MV = PT என்ற சமன்பாட்டில், V என்பது
அ) வாணிபத்தின் அளவு ஆ) பணத்தின் சுழற்ச்சி வேகம்
இ) ரொக்கப் பணத்தின் அளவு ஈ) வங்கி மற்றும் கடன் பணஅளவு

6. 2016 ல் பணமதிப்பு நீக்கம் எந்தெந்த மதிப்பு பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது?
அ) 500 மற்றும் 1000 ஆ) 1000 மற்றும் 2000
இ) 200 மற்றும் 500 ஈ) மேற்சொன்னவை அனைத்தும்

7. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை ?
அ. வங்கி ஆ. அணு ஆற்றல் இ. மருந்து உற்பத்தி ஈ. காப்பீடு.

8. பிரிக்(BRIC) என்ற சுருக்கச் சொல் கோர்க்கப்பட்ட ஆண்டு
அ) 2001 ஆ) 2005 இ) 2008 ஈ) 2010 .

9. GST இதற்கு சமம்?
அ) விற்பனை வரி ஆ) தொழிற் குழும வரி இ)வருமான வரி ஈ) உள்ளாட்சி வரி.

10. வெளிக் காற்று மாசுவுக்கு ------------ காரணமாகும்.
அ) சூடாக்குவதும் சமைப்பதும் ஆ) பாரம்பரிய அடுப்புகள்
இ) மோட்டார் வாகனங்கள் ஈ) மேற்கண்டஅனைத்தும்

G. பிரேம் சந்திரன் சிவகாசி விருதுநகர் மாவட்டம்

11. சர்வோதாயத் திட்டத்தை முன்மொழிந்தவர் யார்?
அ) மஹாத்மா காந்தி ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்
இ) எஸ்.என்.அகர்வால் ஈ) எம்.என்.ராய்

12. ஒரு சிதறல்விளக்கப்படத்தில்ஒரு மாறி அதிகரித்துச் செல்லும் பொழுது மற்றொரு மாறி குறைந்து சென்றால் உடன்தொடர்புக் கெழுவின் அளவு எவ்வாறாக இருக்கும்?
அ) முழு நேர்மறையாக ஆ) முழு எதிர்மறையாக இ) எதிர்மறையாக ஈ) 0

13. பொருளாதார அளவையியல் என்ற வார்த்தையை உருவாக்கியவர்?
அ) ஃபிரான்ஸி கால்டன் ஆ) ராக்னா; ஃபிரிஸ்க்
இ) கார்ல்பியர்சன் ஈ) ஸ்பியர்மேன்

14. இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு------
அ) 1950 ஆ) 1951 இ) 1947 ஈ)1948.

15. சுற்றுச் சூழல் பொருளியலின் அடிப்படை கருத்துக்களில் ஒன்றும், சந்தை தோல்விக்கு காரணமானதும் --------ஆகும்.
அ) நேர்மறைபுற விளைவுகள் ஆ) எதிர்மறைபுற விளைவுகள்
இ) இரண்டும் ஈ) மேற்சொன்னஎதுவுமல்ல.

16. கீழ்வருவனற்றுள் எது நேர்முக வரி?
அ) கலால் வரி ஆ) வருமான வரி இ) சுங்க வரி ஈ) சேவை வரி

17. பத்தாவது பிரிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாடு ஜுலை 2018ல் நடைபெற்ற இடம்
அ) பீஜிங் ஆ) மாஸ்கோ இ) ஜோகனஸ் பர்க் ஈ) பிரசிலியா.

18. வாணிப வீதம் __________ பற்றி குறிப்பிடுகின்றது.
அ. பொருள் ஏற்றுமதி இறக்குமதி விகிதம் ஆ. இறக்குமதி வழி விகிதம்
இ. ஏற்றுமதி விலை இறக் குமதி விலை விகிதம் ஈ. (அ) வும் (இ)யும்.

19. __ பணவீக்கம் பணமதிப்பில் தீவிர மதிப்பு குறைவினை ஏற்படுத்துகிறது.
அ) தவழும் ஆ) நடக்கும் இ) ஓடும் ஈ) உயர்

20. இடம் பெயர்ந்த பின்னர்_________எவ்வளவு மாறுகிறது என்பதை பெருக்கி கூறுகிறது.
அ) வருவாய், நுகர்வு ஆ) வெளியீடு, முதலீடு
இ) முதலீடு, சேமிப்பு ஈ) மொத்ததேவை, வெளியீடு

G. பிரேம் சந்திரன் சிவகாசி விருதுநகர் மாவட்டம்

பகுதி ஆ

**II.** எவையேனும் 7 வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை அளிக்கவும்
வினா எண் 30 கட்டாயம் விடை அளிக்கவும் . **7 x 2 = 14**

21. "பொருளாதாரம்" என்பதன் பொருள் யாது?

22. NNP க்கும் NDP க்கும் உள்ள வேறுபாடு யாது?

23. உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை பற்றி சிறு குறிப்பு வரைக .

24. சராசரி நுகர்வு நாட்டம் (APC) - வரையறு.

25. பண்டப்பணம் என்றால் என்ன ?

26. மைய வங்கி என்பதனைவரையறு.

27. வாணிப வீதத்தினை விளக்குக.

28. நேர்முக வரிக்கு இரு உதாரணங்க ள் தருக.

29. பொருளாதார திட்டமிடலின் வரை விலக்கணம் எழுதுக

30. உடன் தொடர்பு என்பதனை வரையறு.

பகுதி –இ

**III.** எவையேனும் 7 வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடை அளிக்கவும் .
வினா எண் 40 க்கு கட்டாயம் விடையளிக்கவும் . **7 x 3 = 21**

31. கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக.

32. தேசிய வருவாய் கணக்கிடுதலில் "இருமுறைகணக்கீட்டுப் பிரச்சனைக்கு என்ன தீர்வு?

33. தொகு தேவைஎன்றால் என்ன? அதன்கூறுகளைக்கூறுக.

34. நுகர்வுச் சார்பைப் பாதிக்கிற ஏதேனும் மூன்று அகமற்றும் புறக் காரணிகளைவிளக்குக.

35. தேவை -இழுப்பு மற்றும் செலவு உந்து பணவீக்கத்தினை விளக்குக.

36. இந்திய தொழில் நிதிக்கழகத்தின் பணிகளைக் குறிப்பிடுக.

37 பிரிக்ஸ் மாநாடு 2018ன் நிகழ்ச்சி நிரல் பற் றி எழுதுக.

38. நேர்முக மற்றும் மறை முக வரிகளுக்கிடையே யான மூன்று வேறுபாடுகளை க் கூறுக.

39. இ-கழிவுகள் என்ப தன் பொ ருள் தருக.

40. திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துகளை விவரி

G. பிரேம் சந்திரன் சிவகாசி விருதுநகர் மாவட்டம்

Kindl send me your district Questions & Keys to email Id - Padasalai.net@gmail.com

பகுதி -ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும். 7 x 5 = 35**

41. அ) நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.

அல்லது

ஆ) தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.

42. அ) சேயின்அங்காடி விதியினைதிறனாய்வு செய்க.

அல்லது

ஆ) கீன்ஸின் நுகர் வுச் சார்பின் உளவியல் விதியினை வரை படம் மூலம் விளக்குக.

43. அ) பணத்தின் பணிகளை விளக்குக.

அல்லது

ஆ) வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.

44. அ) ஒப்புமைச் செலவுக் கோட்பா ட்டினை விவரி.

அல்லது

ஆ)உலக வங்கியின் பணிகளை வெளிக் கொணர்க.

45. அ) மறை முக வரிகளின் நன்மை கள் யாவை ?

அல்லது

ஆ)புறவிளைவுகள் என்ற கருத்தினையும் அதன் வகைப்பாடுகளையும் விளக்குக.

46. அ) பல்வேறு வகையானத் திட்டமிடல் வகைகளை விவரி.

அல்லது

பின்வரும் விவரங்களுக்கு கார்ல்பியர்ஸனின் ஒட்டுறவுக்கெழுவினை கண்டறிக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Demand of Product X | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| Sale of Product Y | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

47. அ) பேரினப்பொருளியலின்பரப்பெல்லையைவிவரி.

அல்லது

ஆ) தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி.

G. பிரேம் சந்திரன் சிவகாசி விருதுநகர் மாவட்டம்

Kindl send me your district Questions & Keys to email Id - Padasalai.net@gmail.com